சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் – விடுதிகள் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப்பள்ளிகளுக்கு சுகாதாரகுட்டை தகளி (Napkin Burner) - 2012-13-ம் ஆண்டில் வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந4) துறை
நந்தன, தை 5 திருவள்ளுவர் ஆண்டு 2044

அரசாணை (நிலை) எண். 3 நாள்.18.1.2013

படிக்கப்பட்டது

ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடித எண்.ந.க.எண்.த1/9403/2012 நாள்.15.5.2012 மற்றும் 26.6.2012.

-----

ஆணை:-

2012–2013–ம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மானியக்கோரிக்கையின் போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மாணவியர் விடுதிகள் மற்றும் பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு சுகாதாரகுட்டை தகளி (Napkin Burner) வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

2. மேற்கண்ட அறிவிக்கையின் அடிப்படையில் ஆணையர் ஆதிதிராவிடர் நலம் அவர்கள் கருத்துருவினை அரசுக்கு அனுப்பியுள்ளார். அதன்படி ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் 1277 ஆதிதிராவிடர் நல விடுதிகளும், 40 பழங்குடியினர் நல விடுதிகளும் மற்றும் 299 பழங்குடியினர் உண்டு உறைவிடப்பள்ளிகளும் இயங்கி வருகிறது எனவும் இவ்விடுதிகள் மற்றும் பள்ளிகளில் 466 ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகளும், 16 பழங்குடியினர் நல மாணவியர் விடுதிகளும், 100 நடுநிலை/ உயர்நிலை / மேல்நிலை/ பழங்குடியினர் உண்டு உறைவிட பள்ளிகளும் உள்ளன எனவும் இவ்விடுதிகள் மற்றும் பள்ளிகளில் தங்கிப்பயின்று வரும் மாணவியர்களின் உடல் நலத்தைப் பேணவும் விடுதியின் சுற்றுப்புறம் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் இருக்கவும், மாணவிகளுக்கு ஏற்படும் பல்வேறு வகையான நோய்களிலிருந்து பாதுகாக்கவும் மாணவியர் விடுதி மற்றும் பழங்குடியினர் உண்டு உறைவிட பள்ளிகளுக்கு சுகாதார குட்டை தகளி (Napkin Burner) வாங்கி வழங்குவது மிகவும் அத்தியாவசியமானதாகும் எனவும் அதன்படி 582 மாணவியர் விடுதிகள்/உண்டி உறைவிட பள்ளிகளுக்கும் விடுதி ஒன்றுக்கு ஒரு சுகாதார குட்டை தகளி (Napkin Burner) ரூ.25,000/– விலையில் வாங்கி வழங்கலாம் எனவும் அவ்வாறு 582 தகளிகள் வாங்க ரூ.1,45,50,000/– (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தைந்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) (582X25000=1,45,50,000/–) செலவினம் ஏற்படும் எனவும் இத்தொகையினை 2012–2013–ம் ஆண்டில் அனுமதிக்குமாறும் கோரியுள்ளார்.

த.பி.பா.,

3. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து அதனை ஏற்று, 2012–2013–ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்படும் 582 மாணவியர் விடுதிகள் / உண்டி உறைவிடப்பள்ளிகளுக்கு (466 ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகள், 16 பழங்குடியின மாணவியர் விடுதிகள், 100 நடுநிலை/உயர்நிலை/மேல்நிலை/பழங்குடியினர்உண்டி உறைவிடப்பள்ளிகள்) விடுதி/பள்ளி ஒன்றுக்கு தலா ஒரு சுகாதாரகுட்டை தகளி ரூ.25,000/– விலையில் 582 சுகாதார குட்டை தகளி (Napkin Burner) வாங்கி வழங்குவதற்கு (ரூ.25,000 x 582 = ரூ.1,45,50,000) ரூ.1,45,50,000/– (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தைந்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) அனுமதித்து கீழ் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

(i) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கடித எண்.8119/ஆதிந8/2012–2 நாள் 19.6.2012–ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி திறந்த ஒப்பந்தப்புள்ளி முறையில் (Central Open tender system) சுகாதார குட்டை தகளி (Napkin Burner) வாங்கி வழங்கப்படவேண்டும்

(ii) இத்திட்டத்திற்கான ஒப்பளிக்கப்பட்ட தொகையில் செலவினம் போக மீதம் இருப்பின் அத்தொகையினை அரசு கணக்கில் ஒப்படைப்பு செய்தல் வேண்டும்.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பிரித்து பற்று வைக்கப்பட வேண்டும்

| | |
|---|---|
| 2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 ஆதிதிராவிடர் நலன்–277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டம் – "KD மாணவரில்லங்கள்" –19 இயந்திரமும் சாதனமும் – 01 – வாங்குதல் (த.கு.தொ.2225 01 277 KD 1913). | ரூ.1,16,50,000/– |
| 2225 ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்–02 பழங்குடியினர் நலன்-277 – கல்வி – I- திட்டத்தில் சேராதது– AA பள்ளிகள் – 19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல் (த.கு.தொ. 2225 02 277 AA 1918) | ரூ 29,00,000/– |
| மொத்தம் | ரூ.1,45,50,000/– |

5. இது ஒரு 'புதுப்பணி' குறித்த செலவினமாகும். நாளடைவில் இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன் பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு பொது – I) துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து செலவு செய்ய தேவையான தொகைக்கு செயற்குறிப்பினை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வரவு–செலவு பொது – I) துறைக்கு விண்ணப்பிக்கும்படி ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் 2012–2013 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைக்கான உரிய விளக்கக் குறிப்பினை (வரவு–செலவு பொது – I)துறைக்கு அனுப்பி வைக்கும்படி ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை ஆணையர் ஆதிதிராவிடர் நலம் அவர்கள் பெற்று பத்தி 3–ல் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் நடைமுறையில் உள்ள விதிமுறைகளைப் பின்பற்றி சுகாதார குட்டை தகளிகளை (Napkin Burners) வாங்கி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் மூலமாக அவற்றை பகிர்ந்தளிக்க அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. மேலே பத்தி 3–ல் குறிப்பிடப்பட்டுள்ள 582 சுகாதார குட்டை தகளிகள் வாங்கி வழங்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா.கு.எண் 59560 / 2012 நிதி (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்)துறை நாள். 26.10.2012 மற்றும் கூடுதல் நிதியொதுக்கம் பேரேடு எண். 1424 (ஆயிரத்து நானூற்று இருபத்து நான்கு) ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தங்க கலியபெருமாள்.
அரசு செயலாளர்(பொறுப்பு)

பெறுநர்:
ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5,
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நல அலுவலர்கள்
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–5.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35/6.
கணக்காய்வுத் தலைவர் (CAB), சென்னை–9.

<u>நகல்:–</u>
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
அமைச்சர்(நிதி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
அமைச்சர் (ஆதிதிராவிடர்(ம)பழங்குடியினர் நலன்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி(ஆதி(ம)பந)துறை, சென்னை–9.
நிதி (ச.ந./வ.செ.பொ.I/வ.செ.பொ.II)துறை, சென்னை–9.
திட்டம் மற்றும் வளர்ச்சி, சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை–9.
அரசு செயலரின் தனிச்செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு.1, ஆதிந2, ஆதிந3, ஆதிந7, ஆதிந8, ப.மே1, ப.மே2, க.மா.பா)துறை, சென்னை–9
இருப்புகோப்பு/உபரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சா. விஜயராகவன்.
பிரிவு அலுவலர் 18/1/2013